Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.73/2020

Dated 12-01-2026
Deposition of witness for : PW 29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | ரெங்கராஜன் | தாலுக்கா | : | லால்குடி |
| கிராமம் | : | அன்பில் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**All Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருச்சி மாவட்டம் லால்குடி உட்கோட்டம் நெடுஞ்சாலை ரோந்துபிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 13.6.2019 அன்று நடுகாவேரி காவல்நிலையத்தில் த.கா ஆக பணிபுரிந்தபோது நிலைய கு.எண்.90/2019 பிரிவு 302 இ.த.ச வழக்கில் இறந்த பிரசாந்த், த/பெ. வீரமணி என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்வதற்காக ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம்

பெற்று தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சட்டம் சார்ந்த மருத்துவரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை அதன் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரசாந்த் என்ற பிரேதத்தை உடற்கூறாய்வு மருத்துவரிடம் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சவகிடங்கில் வைத்து அடையாளம் காட்டினேன். பிரேதத்தின் மீது இருந்த வைக்கிங் ஜட்டி, கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட், லைட் புளு கலரில் உள்ள சட்டை ஆகியவற்றையும் அந்த உடலில் இருந்து சேகரிக்கப்பட்ட கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் ஆகியவற்றை பாதுக்காப்பாக கண்ணாடி பாட்டிலில் அடைத்து பகுப்பாய்வுக்காக கொடுத்தார். மேற்படி பொருட்களை உடல்கூறாய்வு நடந்த அன்றே மருத்துவரிடம் இருந்து பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) ஆய்வாளர் என்னை விசாரித்தார். வைக்கிங் ஜட்டி, கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட், லைட் புளு கலரில் உள்ள சட்டை ஆகியவற்றை என்னை ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லி இருக்கிறீர்களா என்றால் சொல்லி இருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்தில் வைக்கிங் ஜட்டி, கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட், லைட் புளு கலரில் உள்ள சட்டை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) ஆய்வாளர் உங்களை எத்தனை மணிக்கு எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து விசாரித்தார் என்றால் உடற்கூராய்வு நடந்த அன்று மாலையில் 5 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். இந்த விபரங்கள் காவல்நிலைய பொது

நாட்குறிப்பேட்டில பதிவு ஆகி இருக்கிறதா என்றால் அதை பார்த்தால்தான் சொல்லமுடியும். வழக்கு நாட்குறிப்பேட்டில் இந்த விபரம் பதிவு ஆகி உள்ளதா என்று எனக்கு தெரியாது.

3) உடற்கூராய்வு செய்த மருத்துவரின் பெயர் எனக்கு தெரியாது. பிரேதத்தை மருத்துவரிடம் அடையாளம் காண்பிக்கும்போது ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை மட்டும்தான் கொடுத்தேன்- நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. மருத்துவர் பிரேதத்தை பெற்றுக்கொண்டதற்காக கையெழுத்து எதுவும் போட்டு கொடுத்தாரா என்றா இல்லை.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்